**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.225 of 2025**
**Prosecution Witness**:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | பாபி(PW2) | | |
| Husband's Name | மோகன் | | |
| Village | அவிநாசி | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் சத்துணவு அமைப்பாளராக உள்ளேன்.29.12.2024 தேதியன்று சேலம் டு கோவை பைபாஸ் ரோட்டில் உள்ள உடுப்பி ஹோட்டலில் டீ சாப்பிட்டு விட்டு என் கணவர் ரோட்டை கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக எனக்கு ஒரு நபர் ஃபோன் செய்து தகவல் சொன்னார். என் கணவரும் என்னுடன் தொலைபேசியில் பேசினார். அதன் பின்பு நான் சம்பவ இடம் வந்து பார்த்தபோது என் கணவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். முதலில் என் கணவரை ஏ கே என் மருத்துவமனைக்கு எடுத்து சென்று உள்ளார்கள். அங்கு அவரை அனுமதிக்காததால் அவரை கோயம்புத்தூரில் உள்ள ராயல் கேர் மருத்துவமனைக்கு கொண்டு சென்று உள்ளார்கள். நான் என் கணவரை ராயல் கேர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.அங்கு என் கணவரை பார்க்க முன்பு அனுமதிக்கவில்லை நாங்கள் கேட்ட பின்பு என் கணவரை பார்க்க அனுமதித்தனர் அப்போது என் கணவரை நான் பார்த்தபோது என்னை கண்ணால் மட்டும் பார்த்தார் ஆனால் பேச இயலவில்லை. என் கணவரை ராயல் கேர் மருத்துவமனைக்கு எதிரி தான் அழைத்து சென்றுள்ளார் எதிரியை நான் மருத்துவமனையில் வைத்து பார்த்தேன்.அதற்கு பின்பு கோவையில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் 3 நாட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த மருத்துவமனையில் பணம் கட்ட வசதி இல்லாததால் கோவை அரசு மருத்துவமனைக்கு சனிக்கிழமை கொண்டு சென்றோம். கோவை அரசு மருத்துவமனையில் வைத்து என் கணவர் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு காலமாகிவிட்டார். விபத்து நடந்த இரவில்இரவே நான் காவல் நிலையம் சென்று தகவல் சொன்னேன். போலீசார் என்னிடம் ராயல் கேர் மருத்துவமனையில் வைத்து

வாக்குமூலத்தை பதிவு செய்தனர். என் கணவர் பேச முடியாத நிலையில் இருந்தார். வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. நான் வீட்டில் இருந்து சம்பவ இடத்திற்கு செல்வதற்கு சுமார் 10 நிமிடம் இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு இரவு 8.10 மணி அளவில் சென்றுவிட்டேன். எனக்கு போன் மூலம் யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அதை நான் போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை. என் கணவர் விபத்து நடந்த பின்னிட்டு என்னுடன் பேசியதை நான் காவல் துறையினர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எந்த ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது அந்த பதற்றத்தில் அதை நான் கவனிக்கவில்லை. மேற்படி விபரத்தை பற்றி நான் புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை. நான் முதலில் திருமுருகன் பூண்டி காவல் நிலையத்திற்கு சென்று தகவல் சொல்லிவிட்டு பின்பு கோயம்புத்தூரில் உள்ள ராயல் கேர் மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது காவல்துறையினர் சம்பவம் பற்றி என்னிடம் கேட்டு எழுதிக் கொண்டார்கள் . போலீசார் என் கணவரிடம் விசாரித்தார்களா என்றால் அவர் சுய நினைவு இல்லாமல் இருந்தார். அடிபட்ட என் கணவரை மருத்துவமனைக்கு யார் கொண்டு சென்று அனுமதித்தார்கள் என்று காவல்துறையின் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் எதிரி தான் அனுமதித்தார் என்று சொன்னேன்.உடுப்பி திருச்சி ஹோட்டல் முன்பு ஆறு வழி சாலை உள்ளது என்றால் சரிதான். பைபாஸ் ரோட்டிற்கு போவதற்கும் வருவதற்கும் தனித்தனியாக ரோடு உள்ளது என்றால் சரிதான்.ஆறுவழிச்சாலையை கடந்து செல்வதற்கு அங்கு பாதைகள் எதுவும் இல்லை என்றால் இல்லை. என் கணவர் ஆறு வழிச்சாலை ரோட்டை கடந்து செல்லும் போது தான் விபத்து ஏற்பட்டது என்று தகவல் சொன்னேன் என்றால் சரிதான்.பட்டியல் சாட்சி அபிலாஷ் மற்றும் சிவகுமார் ஆகியோர் என் பக்கத்து வீட்டுக்காரர்கள். பட்டியல் சாட்சியில் உள்ள நவீன்குமார் என்பவரை எனக்கு தெரியும் . மேற்படியார்கள் அனைவரும் நான் சம்பவ இடத்திற்கு வந்த பின்னர் தான் வந்தார்கள் என்றால் சரிதான். நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்து பணம் பெற்றுக் கொண்டேன். எதிரியை நான் மருத்துவமனையில் வைத்துப்பார்க்கவில்லை என்றால் சரியல்ல அவர் மருத்துவமனையில் தான் இருந்தார். சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எந்த வாக்கு மூலமும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| <br><br><br><br>சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |